# MASTER NEGATIVE NUMBER

# வைசியமித்திரன்
## புத்தகம் 10, இலக்கம் 36
## September 13, 1920

Record no. 1102

*Vaiciyamittiran̲*
*Puttakam 10, ilakkam 36*
*September 13, 1920*

Record no. 1102

REG. NO. M. 940.

"VYSIAMITRAN" Karaikudi.

# வைசியமித்திரன்

பிரதிசோமவாரமும் பிரசுரிக்கப்பெறும்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு."

பு. 10. காரைக்குடி ரௌத்திரிஹு ஆவணிமீ 29வ. திங்கட்கிழமை 1920ஹு செப்டம்பர்மீ 13 வ. இ. 36.

சந்தா விபரம். வருடம் 1-க்கு ... ரூ. 5-0-0; மாதம் 6-க்கு ... ரூ. 2-12-0; இலங்கை, சிங்கப்பூர், கோட்டால் முதலான வெளிநாடுகளுக்கு வருடம் 1-க்கு ரூ. 6-0-0.

விளம்பர விகிதம். பத்தி 1-க்கு மாதம் 1-க்கு ரூபாய் 25-0-0. ... 4.



## கனம் நேயர்களுக்கு விசேஷ அறிவிப்பு.

மித்திரனுக்கு எழுதும் நிருபர்களிற் சிலர், தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைப் பொது விஷயங்களில் புகவிட்டுப் படிப்போர்மனத்தை விரோத வுணர்ச்சிக்கு உறைவிடமாக்க முயலுகின்றனர். இனி அவ்வாறு எழுதக்கூடாதென்றும், நியாயமின்றிய செயல்களை நியாயவாதச்செயலாலும் நியாய எழுத்தாலும் வெல்லவேண்டுமெனவும் நாம் நிருபர்களுக்குப் பன் முறை வற்புறுத்தியுள்ளோம். இனி, அவற்றைக் கவனியாமல் எழுதப்படுகின்ற வியாசங்கள் கண்டிப்பாய் மித்திரனில் இடம் பெறுதென்பதை இப்பொழுதும் நண்பர்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

தனிப்பட்ட ஒரு சிலரையோ ஒரு பகுதியாரையோ தாக்காது, யுக்திக்குப் பொருந்திய பொது நலன் தரும்வியாசங்களை மித்திரன் எப்பொழுதும் அங்கீகரிப்பதில் பின்வாங்கமாட்டான். பத்திராதிபர்

## விளம்பரம்

மிஸ்டர் வீ. அ. கனகசபாபதி பிள்ளை தர்மவித்தியா ஞானோதய சங்கத்தின் பிரசாரகவேலையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது.

கரு. கி. சொர்ணலிங்கஞ் செட்டி.
காரியதரிசி தேவகோட்டை.

## வித்யாபிமானம் நிறைந்த கனவான்களுக்கு விக்ஞாபனம்

நான் பர்மாவில் சில்காலம் தங்க வேண்டுவதவசியமாக இருக்கின்றமையால் தேவகோட்டை தர்மவித்தியா ஞானோதய சங்கத்திற்கு உதவி புரிய விரும்பும் கனவான்கள் காரைக்குடி வைசியமித்திரன் ஆபீஸுக்கு அனுப்பாமல் சங்கம் உதவிக்காரியதரிசி தேவகோட்டை ஸ்ரீமாந் கரு கி சொர்ணலிங்கம் செட்டியாரவர்களுக்கு, ரூபாவை யனுப்பும்படி கோருகிறேன். சித. இராமநாதன்செட்டி,
காரியதரிசி
தர்மவித்யா ஞானோதய சங்கம்

## சமரசபோதினி.

இஃதோர் தமிழ் வாரபத்திரிகை பிரதி புதன்கிழமைதோறும் தஞ்சையினின்று வெளிவருவது. தமிழ்நாடுகளில் எங்கும் சுதந்தரத்தை நம்மவர்களுக்குள் எழுப்பி நம் தேசம் சீக்கிரம் சுயஆட்சி பெறுவதற்கே இப்பத்திரிகை ஏற்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இந்தியர்களின் பிறப்புரிமைகளைப் பொன்னே போல் போற்றி அவைகளுக்கு இடையூறுகள் வாராமல் காப்பதும் இப்பத்திரிகையின் முக்கிய விரதமாகும். அதிகாரவர்க்கத்தினர்களின் தீயசெயல்கள் ஈவு இரக்கமின்றிக் கண்டிக்கப்பட்டு அந்நிய செல்களினால் வரும் கெடுதிகளைப், பொது ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் அறிவிப்பது இதன் முக்கிய வேலை. கிராம ஜனங்களின் முன்னேற்றம் பொருளாதார விஷயங்கள், தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகள் தெளிவாகவும் தைரியமாகவும் எழுதப்படும். வருஷ சந்தா தபால் கூலியுள்பட ரூபாய் 5! ஆறு மாதச் சந்தா ரூபாய் 3. வெளிநாடுகளுக்குச் சந்தா ரூபாய் 7. ஒவ்வொரு தமிழரும் இப்பத்திரிகையை வாசிப்பது அவசியமாகும்.

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ. பி. எல்.
பத்திராதிபர் "சமரசபோதினி"
தஞ்சாவூர்.

## கலியுக வர்த்தமானி.

அருமையான வாராந்த

தமிழ்ப்பத்திரிகை.

12 வருஷமாக நடைபெறுகிறது.

இதில் பொதுஜன நன்மையைக்குறித்த விஷயங்களும், பக்தசரித்திரங்களும், கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலியவைகளைப் பற்றிய அருமையான வியாசங்களும், நீதிக்கதைகளும், நியாயஸ்தலம், யுத்தமுதலிய சமாசாரங்களும் வெளியாகிறது.

சந்தா விவரம்—தபால் கூலியுடன் உள்நாட்டிக்கு ஒரு வருஷத்திற்கு ரூ.4-0-0
வெளிநாடுகளுக்கு ஷை ரூ.5-0-0
மாதிரி பிரதிக்கு அரை அணாஸ்டாம்பு அனுப்பவும்

பத்திராதிபர்—டி. முத்துசாமி செட்டியார்
17, சிங்கண்ண தெரு,
பார்க்டவுன் போஸ்டு, மதறாஸ்.



## வியாச்சியம் தீர்மானம் செய்ய சமன்.

(சிவில் புரோஸீஜர் கோடு 5வது ஆர்டர் 1,5 வது ரூல்களின்படி)

லோயர்பர்மா சீப் கோர்ட்டு முன்பாக சிவில் அசல் வியாச்சியம்.

1920ம் வருஷத்து 213ம் நம்பர் சிவில் ஒழுங்கு வியாச்சியம்.

வாதி

ரங்கோன் மொகல் ரோட்டு 12ம் நிர் வீட்டில் பங்காளிமுறையில் லேவாதேவி வியாபாரம் செய்துவருகின்ற ஏ. எம். எம். எல். செட்டி கடையின் அட்டார்னியும் ஏஜண்டுமான பழனியப்ப செட்டி.

பிரதிவாதிகள்

1. சிதம்பரஞ் செட்டி 2. முதல் பிரதிவாதியின் மகனான முத்தய்யா செட்டி 3. முதல் பிரதிவாதியின் மகனும் மைனருமான அருணாசலம் செட்டி 4. முதல் பிரதிவாதியின் மகனும் மைனருமான நாகப்பசெட்டி 3ம், 4ம். பிரதிவாதிகளும் அவர்களின் தகப்பனும் கார்டியனுமான 1வது பிரதிவாதியின் புத்திரர்களும் எல்லோரும் ராமனாதபுரம் ஜில்லா தேவகோட்டை டிஸ்டிரிக்டு முனசிபு கோர்ட்டு சரகநூதைச் சேர்ந்த கேமத்தாம் பட்டியில் வசிப்பவர்கள் 5. முதல் பிரதிவாதியின் மகனான ராமசாமி செட்டி தற்காலம் மைனுங்கில்வசித்துவருகின்றார் அவர்கள்எல்லோருங்கூட்டுப் பங்காளி முறையில் தற்காலம் ஐ.பி.ஆர். ஆர்.எம் சி. டி. என்ற விலாசம் வைத்து அதன்கூட்டாளியும் மானேஜருமான முத்தய்யா செட்டியின் மானேஜ் மெண்டில் லேவா தேவி வியாபாரம் நடத்தி வருகிறார்கள்.

1, 2, 3, 4, பிரதிவாதிகளுக்கு தெரிவிப்பது யாதெனில். இதன் கூடச்சேர்த்திருக்கும் பிராது நகலில் கண்டபடி பிராமிசரி நோட்டின் பேரில் வாதிக்கு அசல் வட்டியுள்பட கொடுக்கவேண்டிய ரூ 8034-12–9 என வாதியால் வியாச்சியம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

1920ஹு நவம்பர்மாசம்15தேதி11மணிக்கு நீர்நேரிலே, அட்வோகேட்அல்லது அதிகாரம்பெற்றஏஜண்டுஅல்லதியக்கீல் மூலமாகவோநேரில்இந்தக்கோர்ட்டில் ஆஜராகும்படி சம்மன் செய்யப்பட்டிருக்கிறது அன்றையதினம் ஷைவியாச்சியம் முடிவாக தீர்மானம் செய்யப்படும்.

இந்த வியாச்சியத்தில் உமக்கு வாதிக்கவேண்டு மென்ற விருப்ப மிருந்தால் குறைந்தது, 7நாளைக்கு முன்னதாகவே எழுத்து மூலம் ஸ்டேட்மெண்டு கொடுக்கவேண்டும். தவறினால் நீர் அன்னியிலே கேசு தீர்மானம் செய்யப்படும்

1920 ஆகஸ்டு 23ம் தேதியாகிய இன்றையதினம் கோர்டு முத்திரையும் கையொப்பமும் செய்யப்பட்டிருக்கிறது.

அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தார்.



## நோட்டீஸ்.

தேவகோட்டை டிஸ்டிரிக்டு முன்சீபு கோர்ட்டு.

1920ஹு O S 661, 662, 666.

மு கா அ. நாச்சியப்ப செட்டியார் 1. சி வெ காசித சிதம்பரஞ்செட்டியார் 2. கா. கா. கா நாராயணன் செட்டியார் 3. ராம. கா. நா சொக்கலிங்கஞ்செட்டியார் 4. } வாதிகள்

பிரதிவாதிகள்.

முத்தாமன்செட்டி O S 661 of-20
குமரசாமி அம்பலம் O S 662 of-20
செங்குவய்யர் O S 666 of-20

கண்டனூர் செட்டியார் வகையறா காலவாய் இடத்தில் ஷை நம்பர்களில் பிரதிவாதிகள் அக்கிரமமாகப் பிரவேசித்து கட்டிடங்களைகட்டியும் வரி எடுத்தும்பாலம்போட்டும்மேற்படி காலவாய்க்கு கெடுதல் செய்திருப்பதை நிவர்த்தி செய்து கட்டிடாவகைபூரவை இடித்து காலி செய்து சுவாதீனம் செய்யவும் இன்னும் மற்ற பரிகாரங்கள் கேட்டும் ஷை செட்டியார் வகையறாவுக்காகவும் அவர்களுடைய நன்மையை உத்தேசித்தும் ஷை டிஸ்டிரிக்டுகளில் சிலர்களான இந்த வாதிகளால் சி பு கோடு 1-வது ஆர்டர் 8-வது ரூல்படி பிருது செய்து வாயிதா ஏற்பட்டிருப்பதால் ஷை நம்பர்களில்ஷை செட்டியார் வகையறாக்களில் சேர்ந்த மற்ற எவரும் வாதிகளாகவோ அல்லது பிரதிவாதிகளாகவோ சேர்ந்துகொள்ளலாம்.

Os 661 of 20 } வாயிதா 22-9-20
Os 662 of 20 }
Os 666 of 20 வாயிதா 15-9-20

தேவகோட்டை 31—8—20 } பி ராமசாமி அய்யர் வாதி வக்கீல்.

## லோயர் பர்மா சீப் கோர்ட்டில் ஸிவில் அசல் வியாச்சியம்.

1920ம்-ஹு சிவில் ஒழுங்கு நிர் 213.

மனுதார்.
ஏ. எம். எம். எல் செட்டிகடை,

பிரதிவாதிகள்.
சிதம்பரஞ்செட்டி வகையறாபேர்கள்.

இராமனாதபுரம் ஜில்லா தேவகோட்டை டிஸ்டிரிக்டுமுனசிப்கோர்ட்டு சரகம் கேமத்தான் பட்டியிலிருக்கும் இக்கேசின் 1ம் பிரதிவாதி சிதம்பரஞ் செட்டிக்கும் ஷை 1ம் பிரதிவாதியின் குமாரர்களும் மைனர்களுமான அருணாசலஞ் செட்டி நாகப்ப செட்டி ஆகிய ஷைகேசின் 3, 4, பிரதிவாதிகளின் கார்டியனும் தகப்பனுமான சிதம்பரஞ் செட்டிக்குத் தெரிவிப்பதாவதெனில், இக்கேசின் மனுதார் ஷைமைனர்களான நாகப்பசெட்டி அருணாசலஞ் செட்டி ஆகிய இருவர்களுக்கும் உம்மை கார்டியனாக இக்கேசில் நியமிக்கவேண்டி இந்தக்கோர்ட்டுக்கு மனுச்செய்து இருப்பதோடு இதுசம்மந்தமான மனுவாகவும் அபிடவிட்டு நகலுமித்துடன்சேர்க்கப்பட்டிருக்கிறது

1920ம் வருஷம் நவம்பர் மாசம் 15ந் தேதி திங்கட்கிழமை கோர்ட்டு முன்பாக நீர் நேரிலோ அல்லது வக்கீல் அல்லது அட்வோகேட் மூலமாகவோ ஆஜராகி மனுவில் கண்ட சமாசாரத்துக்கு எதிரிடையாக காரணங்காட்டவேண்டும். தவறினால் மனு விசாரிக்கப்பட்டு ஒருதலைத் தீர்மானம் செய்யப்படும்

1920 ஆகஸ்டு23ந் தேதிகோர்ட்டு முத்திரையும் என் கையெழுத்தும் வைக்கப்பட்டிருக்கிறது.

அஸிஸ்டெண்டு ரிஜிஸ்தரர்.

## தொழிற்குறிப்பு.

### சர்க்கரையின் உற்பத்தி.

ஸெப்டம்பர் மாதம் 1௳தேதி பச்சையப்பன் [?] ... சர்க்கரையின் உற்பத்தி முறையைப்பற்றி ஒரு பிரசங்கஞ் செய்தார். [illegible]

## கடிதங்களும் விசேஷ குறிப்புகளும்.

வைசியமித்திரன்பத்திராதிபருக்கு

ஐயா!

I

தங்களுடைய மித்திரனின் 29-வது இலக்கத்தில் வெளிவந்த "பொன்மொழியை"ப்பொன்மொழியாக்கி விட்டதைக் குறித்து அதிக சந்தோஷப் [illegible]

[illegible]

### விசேஷக் குறிப்பு.

[illegible]

II

[illegible]

### விடை.

[illegible]



2-ம் பக்கத் தொடர்ச்சி

இனி, உண்மையை புணர்ந்து உலகத்திற்குழைக்கும் உத்தமத் தொண்டர் உலகத்தாற் சிலரே. மேலும் ஒரு சமூகத்திலேயுள்ள எல்லா மனிதர்களும், அச்சமூகத்தின் வாழ்க்கை நிலைமையைப் பூராவும் தெரிந்துகொண்டுதான் தங்களுடைய வேலையைக் கவனிப்பது என்ற நியமமும் இப்பொழுதுள்ள நிலைமையில் கைகூடாதகாரியம். [illegible]

ழி கூறல்) தானம் (வேண்டியன அளித்தல்) பேதம் (உரிய சமயத்தில் பிரித்தாளுதல்) தண்டம் [தீது முறை பிறழின் தண்டித்தல்] என்னும் நால்வகை நீதி முறையில் நிலைபெற்ற ஆட்சி என்று பொருள். இந்நான்கு உபாயங்களும் நம் பூர்வீக அரசர்களால் அவ்வக் காலத்திற் கேற்ப கையாளப்பட்டு வந்தன என்பதை நம் சேயர் நன்கறிவர். ஆனால் இண்டைரெக்ட் பாலிஸி என்னும் அப்பிரதிபக்ஷ ராஜதந்திரத்தைத்தான் நாம் நன்கு கவனித்தல்வேண்டும். இண்டைரெக்ட் பாலிஸி என்றால் ராஜ நீதிப்போக்கை அதன் அதிகாரிகள் சாமானியமாய்ப் பலர் [illegible]

## விசேஷ காங்கிரஸ் நடவடிக்கைகள்.

சென்ற வாரமித்திரனில், காங்கரஸ் மகாசபையில் கூடிய வைபத்தையும், அதன் உபசாரணைக் கமிட்டித் தலைவர், அக்கிராசனர் ஆகிய இவர்களின் பிரசங்கச் சுருக்கத்தையும் குறிப்பிட்டோம். இப்பொழுது காங்கிரஸ் மகாசபையானது முடிவடைந்துவிட்டதால், இனி அதன் பிற்பகுதிகளை நாம் விவரிப்பதாக கூறியபடி அதன் பின் நிகழ்ச்சி முறைகளை வரைவோம்.

அக்கிராசனர் முடிவுரை கூறி முடிந்ததும், காங்கிரஸ் காரியதரிசி எழுந்து, காங்கிரஸ் மகாசபைக்கு வரமுடியாமற் போனதற்காக வருந்தித் தந்தியடித்திருப்போர்களின் பெயர்களைப்படித்தார். பின்னர் விஷய ஆலோசனைக் கமிட்டி மெம்பர்கள் மாகாணவாரியாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். விஷய ஆலோசனைக்கமிட்டி மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட முறையிலிருந்து சில மாகாணங்களில் மகாத்மா காந்தியின் ஒத்துழையாத் தீர்மானத்தின் அனுஷ்டான முறையை ஆதரிப்போரையே இக்கமிட்டியில் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கவேண்டும் என்ற முயற்சி ஏற்கனவே பல மாகாணங்களில் நடந்துவந்திருப்பதாகத் தெரிகின்றது. காங்கிரஸில் முகம்மதியர்க் களிக்கப்பட்டிருக்கும் பிரத்தியேகப் பிரதிநிதித்துவ உரிமையையும் இவ்விஷயத்தில் உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் இம்மாதிரி (கட்டுப்பாடான முறைகளைக் கருதி) ஏற்படுத்தப்பட்ட விஷயாலோசனைக் கமிட்டியானது எப்படி காங்கிரஸ் தீர்மானிக்க வேண்டிய விஷயங்களை உருக்கலைபாமற் செய்யப்போகின்றது எனச் சிலர் [illegible]

[illegible]

யோகங்களையும் விட்டு விடவேண்டும்,

(b) கவர்ன்மெண்ட்தார்பார்களுக்கும் பட்டமளிப்பு வைபவங்களுக்கும் மற்றும் நடக்கக்கூடியகச்சேரிகளுக்கும் போகமறுத்துவிடவேண்டும்.

(c) சர்க்கார் பள்ளிக்கூடங்களையும் சர்க்கார் உதவிபெற்ற பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் பகிஷ்காரஞ் செய்து தேசியப் பள்ளிகளும் கலாசாலைகளும் ஸ்தாபிக்கவேண்டும்.

(d) வக்கீல்கள் தம் உத்தியோகத்தை விட்டு, அவர்களுடைய உதவியால் பிரத்தியேகமான நியாயசபைகள் ஏற்படுத்தி பற்பல சச்சரவுகளையும் தீர்க்கவேண்டும்.

(e) மெஸபடோமியாவில் குமாஸ்தாக்களாகவும் கூலிகளாகவும் சிப்பாய்களாகவும் வேலைபார்க்க மறுத்துவிடவேண்டும். ஆள் சேர்ப்போரிடம் இதைக் கண்டிப்பாய்த் தெரிவித்துவிடவேண்டும்.

(f) புதிய சட்டசபைகளுக்கு நடக்கப்போகும் எலக்ஷனில் சம்பந்தப்படாமல் அபேக்ஷகர்கள் விலகிவிட வேண்டும். காங்கிரஸின் போதனைக்கு மாறாக அபேக்ஷகர்களாய் நிற்போருக்கு ஓட்டுக் கொடுக்க மறுத்துவிட வேண்டும்.

"தன்னடக்கமும் தியாகபுத்தியும் இல்லாமல் எந்த தேசமும் முற்போக்கடையாததால், ஒத்துழையாமையை அநுசரிக்க [illegible]

மறுப்பேன்,

(c) தெரிந்தெடுக்கப்பட்ட மெஜாரிட்டி அங்கத்தினர்களுடன் சேர்ந்து சமயம் வாய்த்த போதெல்லாம் தற்கால நிருவாக முறை நடைபெற அசாத்தியமாகும்படி செய்வேன்.

(d) என்கட்சியினர் மைனாரிட்டியாக இருந்தால் ராஜீனாமா செய்துவிட்டு முன்னைய நோக்கத்துடனேயே மீண்டும் அபேக்ஷகராய் நின்று ஸ்தானம் பெறமுயற்சிப்பேன் இத்தீர்மானத்தை ஆதரித்து மிஸ்டர் வி. ஆர் தாஸ் வெகுநேரம்வரை மிக்க உருக்கமாகப் பிரசங்கஞ் செய்தார். ஒத்துழையா இயக்கத்தின்படி இன்றே கல்விச்சாலைகளையும் கோர்டுகளையும் பகிஷ்காரஞ் செய்துவிடுவதா அல்லது தேசிய கல்விச்சாலைகளையும் தேசியப்பஞ்சாயத்து சபைகளையும் ஸ்தாபித்து அவ்வாறு செய்வதா என்பதைப்பற்றி நான் சில சென்னிகள் கேட்டார். பாபு விபினசந்திரபாலர், "ஐரோப்பா பாங்கிகளிலுள்ள இந்தியர்களின் மூலதனத்தை உடனே திருப்பப்பெற வேண்டுமென்றும், முழு சுயஆட்சியைக்கோரிக்க வேண்டுமென வாதிக்க வேண்டி பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு ஒரு தூதனுப்பவேண்டுமென்றும், ஒத்துழையாமையைநிறைவேற்றுவதற்காக தேசியக்கல்விச்சாலைகள், பஞ்சாயத்து மகாசபைகள் ஆகியவைகளை ஏற்படுத்தவேண்டுமென்றும், கௌரவப்பட்டங்கள் இவற்றைவிட வேண்டுமென்றும், ஐரோப்பிய முதலாளிகளிடமிருந்து இந்தியத் தொழிலாளர்களை [illegible]

[illegible]

இதன் தொடர்ச்சி 6-ம்பக்கம் பார்க்க.

## நோட்டீஸ்.

தேவகோட்டை.
டிஸ்டிரிக்டு முனிசீப் கோர்ட்டு
1920௵ O S. 684.

மு. நா. அ. நச்சியப்ப செட்டியார் 1. சி. வெ. நா. சித. சிதம்பரம்செட்டியார் 2. நா. நா. நாராயணன் செட்டியார் 3 ராம. நா. நா. சொக்கலிங்கம் செட்டியார் 4: } வாதிகள்.

முக்கன் 1
சின்னகருப்பன் 2 } பிரதிவாதிகள்.

தர்மாசனம் மடையன் வயல் கிராமம் கண்மாய்கரை, பிறகரை, நிடல் தென்னர்தோப்பில் அக்கிரமமாகப் பிரவேசித்து பலன்களை கைப்பற்றிக்கொண்டு போகிற பிரதிவாதிகளை பிருதில் கண்ட சொத்தைவிட்டு அப்புறப்படுத்தி ஷை மடையன்வயல் பங்காளிகளுக்காகவும் அவர்களுடைய நன்மையை யுத்தேசித்தும் ஷை பங்காளிகளில் சேர்ந்த சிலர்களான இந்த வாதிகளால் சி. பு. கோடு 1வது ஆர்டர் 8வது ரூல்படி பிருது செய்து ஷை பிருதும் 29—9—20ல் வாயிதா ஏற்பட்டிருப்பதால் ஷை மடையன் வயல் கிறுமம் பங்காளிகளில் யாரும் வாதிகளாகவோ பிரதிவாதிகளாகவோ இந்த வியாஜ்ஜியத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

பி. ராமசுவாமி அய்யர்
வாதி வக்கீல்
31—8—20 தேவகோட்டை.

[illegible]

வைசியமித்திரன்
1920ஞு செப்டம்பர்௴ 13௳

## தேசிய மகாசபையும் ஒற்றுமையாத் தீர்மானமும்

உலகத்தின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்ற மனிதவர்க்கமானது மிக்க கலக்கிடமான நிலையினின்று தான் தப்பித்துக்கொள்ளுமுபாயம் யாது? எனவலையிலகப்பட்டமீன் போல கண்கொட்டாது ஆலோசித்துவருகின்ற இத்தருணத்தில், இந்திய மகாஜனங்களின் உயிர்வாழ்க்கைக்குரிய சுதந்தரமுறையை நிர்ணயஞ் செய்ய நேற்றெனச் சென்றவாரத்தில் கல்கத்தா நகரத்திலே கூடிய விசேஷ காங்கிரஸ் மகாசபையானது, சென்ற வெற்றியோடு தனது வேலையை ஒருவாறு பூர்த்திக்குக் கொண்டு வந்திருக்கின்றது எனக்கூறத் தக்கநிலையை யடைந்திருக்கின்றது. தேசிய மகா ஜனங்களின் ராஜீயப் பயிற்சி முறையைப்பரிசோதிக்கும் இடமாகிய இந்த காங்கிரஸ் மகா சபையின், முன்னுரைப்பிரசங்கத்தை நாம் முன்னமே ஒருவாறு கூறிவிட்டோம் அதிலஇந்தியமகாஜனங்களுடையவும் ஒற்றுமையபிப்பிராயத்தைத் தழுவிமுடிவு செய்ய வேண்டியதாயிருந்த ஒற்றுமையாத் தீர்மானமானது, அன்று இந்தியர்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தைப் பெற்றுவிடலாமோ என்ற விஷயம் சந்தேகத்திற் குரிப்பட்டிருந்ததால், சென்ற தினங்களில் அந்த ஐயாதாரமான சுதந்தரத் தீர்மானத்தைக் குறித்தேனும், அல்லது இனி அதனை யெட்டி நடத்தவேண்டிய காரியங்களுக்கு வழிகாட்டிகளாக வேனும் நாம் யாதோர் அபிப்பிராயச் சொற்களையுங் கூறவில்லை. ஆனால் ஒற்றுமையா இயக்க எண்ணங்கள் பிரசாரர்களது சொற்களின் மூலமாக இந்திய பூமியில் விதைக்கப்பட்டு வருங்காலத்திலேயே, நாம் அதன் முக்கிய லக்ஷியத்தை மனப்பூர்வமாக வரவேற்று, அதன் சித்திப்பயனை நாம் அனைவரும் அடையவேண்டுமானால், அதற்கான அனுஷ்டான முறைகளையே விரைவில் கைக்கொள்ள வேண்டுமென்பர், அந்த முறைகள் இவையாமெனவும் ஒருவாறு விளக்கி அத்தகைய அனுஷ்டான முறைகள் கைக்கொள்ளப் பட்டாலன்றி நமது லக்ஷியம் இவ்வாழ்நாளிற்குள் கிடைக்கப்பெறாதென்றும் கூறினோம். நமது அபிப்பிராயத்தைப் போன்று இந்தியாவிலே வாழ்ந்துவருகின்ற—இந்திய மகாஜனங்களின் நற்கால புருஷ பக்குவப்போக்கு நிலையை உற்றுநோக்கிவருகின்ற—அநுபவசாலிகளாகிய சில தலைவர்களும், அவ்வொற்றுமையாமை இயக்கத்தின் அனுஷ்டான முறையைக் குறித்துப் பெரிதும் நியாயங் காட்டி வாதித்தனர். அவ்வாறே மேதாவிகளின் அபிப்பிராயத்தைப்பற்றி ஆவலோடு எதிர்பார்த்து நின்ற பத்திரிகைகளும், பற்பல தலைவர்களின் கருத்தை விளக்கித் தத்தம் கலைபக்கத்தில் பற்பல ராஜதந்திர நுட்பங்களை எடுத்துக்கூறி இடைவிடாது வாதம் புரிந்து வந்தன. 'அவையாவும் பொதுஜனங்களின் முன்னே செல்ல இன்னும் பலகாலஞ் செல்லும்' என்ற தத்துவத்தை விளக்கவே போதும். அத்தகைய வாதங்களுக்குச் சரியான சமாதானங்களும் பரிகார உதவிகளும் அளிக்கப்படாமலும், இந்தியமகாஜனங்களின் ஏகோபித்த அபிப்பிராயம்போல, ஒற்றுமையாமைத் தீர்மானமானது காங்கிரஸ் மகாசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டதாகப் பாவிக்கப்பட்டுவிட்டது. ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி, லோகமான்யதிலகர் இவர்களைப் போன்ற ராஜதந்திர நிபுணர்களால் சென்ற 35 வருஷ காலமாக காங்கிரஸ் மகாசபையின் நியாய நிழலின்கீழ் வைத்து வளர்க்கப்பட்டு வந்த—இந்தியர்களின் உயிராகிய பட்சபாதமற்ற—நிறைவேற்றத்தக்க அந்த அபிப்பிராயமெனும் கற்பகக் கொடியானது, தேசத்தின் தொண்டுபுரிவதையே தமது வாழ்நாளின் பயன் என்று கருதுகின்ற உண்மைத் தலைவர்களின் 'மனப்பூர்த்தியான அபிப்பிராயமெனும்' சூரியனது கிரணத்தைப் பெற்று வளர்ச்சி பெறுவனவாம் செய்யப்பட்டுவிட்டது. இனி, அதன் நிகழ்ச்சி முறை எவ்வாறாயினும், அந்த முப்பத்து மூன்றுகோடி தெய்வ சபையில் எந்த தீர்மானமானது நிறைவேற்றப்பட்டிருக்கின்றதாகக் கூறப்படுகின்றதோ அந்தத் தீர்மானமானது, தனது உத்தேசத்தை விரைவில் நிறைவேற்றி, சுதந்தர தாகத்தால் வருந்துகின்ற 33 கோடி இந்தியர்களுக்கு மூவா மருந்தே போலும் அழியாவாழ்க்கையை அளிக்க வேண்டும். "தேசிய மகாசபையின் தீர்மானத்தை யநுசரித்துப் பள்ளியை வெறுத்தோம், தேசிய மகாசபையின் அபிப்பிராயத்தைப் பின்பற்றி நியாய சபைகளுக்குச்செல்ல மறுத்தோம். தேசிய மகாசபையின் பிரதிநிதியை எதிர்பார்த்து, சட்டசபைகளைத் தேவையற்றனவென்றுபுறக்கணித்தோம்" என்று உதாரமொழி புகலுமாறு செய்த தலைவர்கள் இனி உண்மையிலே இந்தியர்கள் அவ்வாறு கூற வேண்டிய நிலைக்கு விரைவில் வருமாறு வேலை செய்தல் வேண்டும். கண்ணஞ்சுவைத்தமிழ்க்க புனித பூமியாகிய இந்தியா, தனது செல்வங்கள் அந்நியரால் சூக்ஷமாக்கப் பெறாது பாதுகாக்கப்படவேண்டும். ஆங்கில பாஷையை வெறுத்த அபிமானிகள் தமது செல்வத்தையும் தமது சகோதரர்களது செல்வத்தையும் இனி அத்தகைய பாஷைச் சுரங்கங்களிலே போடாது, நமது சகோதரர்களின் துன்பத்தை நீக்குதற்குரியதைத்தொழிற்சாலைகளிலே தமதுசெல்வத்தை அர்ப்பணஞ் செய்யவேண்டும். நீண்டகாலமாய் அடிமைவாழ்க்கையில் விடுபட்டு, தனதுஆத்மசக்தியை இழந்து தனதுபற்றுக்கோடலிசித்து பிறருதவியால் தருடன்போலும்ஜீவித்துவந்த நம்பையுமினசமூகம், திடீரென்று தனது நீண்ட காலத்தியபழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டுவாழ்தலென்பது எளிதானதல்ல என்பதையும் நாம் உணரவேண்டும். தேவையுண்டானால் வழி திறக்கப் பெறுமெனச் சில தலைவர் கூறுகின்றனர். ஆனால், தனது தேவை இன்னதென்று நன்கு உணர்ந்தும் அது நிறைவேறப் பெறும் வகை யறியாதார் பலர் மனித வர்க்கத்தில் நிறைந்திருக்கக்கூடிய ஒரு இயற்கை நிலை யமைந்திருப்பதனாலேயே உலகம் பல துன்பங்களுக்குஉள்ளாகின்ற தென்பதையும் அறிவாளிகள் ஞாபகத்திற் கொள்வர். ஏனெனில் உலகத்தில் தோன்றிய புல்முதல் பராக்கிரமன் ஈறாக வுள்ள யாவும்சுதந்தரஜீவிதத்தையேவிரும்பி நிற்பதால், அத்தகைய சுதந்தரத்தை யளிக்க வேண்டிமுன்வரும் பெரியோர்களை அந்த உலகமானது சிறிது ஆக்ஷேபிக்கத் தொடங்குமானால் அதன் சுக சுதந்தர வாழ்க்கை முறையிலேயே சில இடையூறுகள் குறுக்கிடுமாறுசெய்யப்படுவதாக அது கருதிப் பெருந்தனம்ஆக்ஷேபிக்கத்தொடங்கிற்றாக நாம்கருதலாம். துன்பத்தைநீக்கி இன்பத்தைப் பெறவேண்டுமென ஒப்புக்கவலையுற்றிருக்கும் அந்த உலகமானது, அத்தகைய சுதந்தரஇன்பமளிக்கும்பெரியாரை சிறிது ஆக்ஷேபிக்குமானால், அதற்கு அப்பெரியாரிடத்து வெகுமானக் குறைவோ அல்லது பூஜ்யதைக் குறைவோ ஏற்பட்டுவிட்டது என ஒருவராலும் கூறமுடியாது. இது உலகின் இயல்பு என்பதை ஒப்புக்கொள்வோர்யாவரும் நமது மகாத்மா காந்தியிடத்து இந்தியர்கள் வைத்திருக்கும் உண்மைப் பெருமையை நன்கறிவர். மகாத்மா காந்தியோ, தமது ஸத்ய வொழுக்கத்தாலும் பக்ஷபாத மற்ற நியாயத்தாலும், உதாரச் செயல்களாலும் ஜீவகாருண்ய அன்புவொழுக்கங்களாலும் சென்ற 35 வருஷ காலமாய் இந்தியர்களின் பேருதவை பெற்றிருக்கின்றனர் அக்காரணத்தால்ஒருதெய்வீகசக்தி பொருந்தியமகாபுருஷனென்றேபாராட்டுபாய் அவர்கருதப்படுகிறார். அம்மகாபுருஷனது ஒருதீர்மானத்தை அறிவிற் சிறந்த தலைவர்கள் சிறிது ஆக்ஷேபிக்க வேண்டுமானால் அதற்கு ஏதேனும் சொற்பக் காரணம் இருந்திருக்க வேண்டும் அந்தக் காரணம் யாதெனின் 'இனி இவ்வொற்றுமையாமையா இயக்கத்தைத் திடீரென இந்தியர்கள் கைக்கொண்டுவிடுவார்களானால் அப்பொழுது அவர்களினால்நடத்திச் செல்லவேண்டியதான வருங்கால அடுத்த நிமிஷத்திய வாழ்க்கை நிலைமையானது மகாத்மாவினால் எவ்விதம் நடத்திச்செல்லப்படும்'' என்ற விபரத்தைப் பற்றி யிருக்கலாமோ எனக்கருதுகின்றோம்.

இவ்வொரு காரணத்திற்கு மாத்திரம் மகாத்மா செவி கொடுத்து, ஒரு உறுதியான மறுமொழி யளித்துத் தலைவர்களைத் திருப்திபடுத்தியிருந்திருப்பாரானால் அந்த நிமிஷம்முதலே மகாத்மாவின்தீர்மானத்திற்கு மறுமொழி பகருவோர் இந்தியநாட்டில் காணப்படார்.

## தலைவர்களும் காங்கிரஸ் மகா சபையும்.

இவ்வருடத்தில் கூடிய விசேஷ காங்கிரஸ் மகாசபையானது இதற்கு முன் கூடிய சபைகளைப்போல, தலைவர்களாகிற அதிகார வர்க்கத்தினரின் விசேஷ அதிகாரத்தைப் பெற்றிராமற் போனாலும் ஒத்துழையாமை இயக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கமுடைய தலைவர்கள், தாங்கள் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக தங்களுக்கு பக்கபலமான பலரை அழைத்துவந்து தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதை யோசிக்கும்போது அந்த நிலைமை முற்றிலும் மாறிவிடவில்லை யென்றெண்ணக்கவேண்டியிருக்கிறது இதற்கு உதாரணமாக ஓட் கொடுத்தவர்களில் பெரும்பாலோர் சென்னையிலுள்ளமுகம்மதியர்களும், மிஸ்டர் காந்தியிடம் அபிமானமுள்ள கல்கத்தா மார்வாரிகளும், பஞ்சாப் வாசிகளில் பலருமாயிருந்திருப்பதிலிருந்தும் அறியலாகும். ஏனெனில் தேசமகா சபை என்ற பெயருக்கேற்ப தேசமகா ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகள் தேசமகாஜனங்களின் அபிப்பிராயத்தைத் தாங்கி சுதந்தரத்துடன் ஓட் கொடுத்திருப்பதாய் விஷய ஆலோசனைக் கம்மிட்டியிலும், காங்கிரஸிலுள்ள, தலைவர்கள் பேசின பேச்சிலிருந்தும் ஜனங்கள் நடந்துகொண்டபான்மையிலிருந்தும் அறியப்போதுமான சாட்சியங்களில்லை. இதன் காரணமாக ஒத்துழையாமை தீர்மானத்தின் அனுஷ்டான முறைகளை திருத்தம் செய்து நடத்த வேண்டுமென்று தேசக்ஷேமத்தில் வெகு நாட்களாக கவலை கொண்டும், ஆத்ம தியாகம் செய்தும் உழைத்தும்வருகின்ற மிஸ்டர்பால்,பண்டித மாளவியா,மிஸ்டர் தாஸ்,கபர்தே,கெல்கார், விஜயராகவாசாரியார்,மிஸ்டர் மதவராவ் போன்ற தலைவர்கள் குறித்த தீர்மானம்நிறைவேறுவதற்குரிய வழிகளை எடுத்துப்பேசியும்சிறிதும் பயன்படாமல்போனதற்கு ஒத்துழையாமை இயக்கத்தில்பிரமைகொண்ட சிலதலைவர்களின் கட்டுப்பட்டென்றே கருதவேண்டியிருக்கிறது இதனால் வெகு நாட்களாக தேசத்தொண்டு செய்தவர்கள் காங்கிரஸை விட்டு விலகவும் நேரிட்டிருக்கிறது. ஒத்துழையாமை இயக்கத்தை காங்கிரஸ் மகாசபையானது அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும்படி கட்டளையிடாமற்போனாலும், சிபார்சு செய்திருக்கும் நிலைமையில் அவ்வியக்கத்திற் கச் சம்மதப்படாதவர்கள் காங்கிரஸ் கொள்கை ஒரு கக்ஷியினரால் நிறைவேற்றப்பட்டதென்றும், தேசமகா ஜனங்களின் ஏகோபித்த கட்டளையாகாதென்றும், ஆகையினால் அதில் சேருவதற்குப் பிரியப்படாமல் ஒதுங்கி நிற்பது அவசியமென்றும்-ஒரு பகுதியாரும், காங்கிரஸ் தீர்மானத்திற்கு ஒரு கௌரவம் கொடுப்பதற்காக மாத்திரம், தாங்கள் இனி சட்டசபை எலக்ஷனில் அபேக்ஷகர்களாய் நிற்பதில்லையென்று வேறொருபகுதியாரும்சொல்ல முன் வந்து விட்டதால்காங்கிரஸ் மகா சபையாகிற ஒரு சரீரமானது ஏற்கனவே மிதவாதிகள் ஏதோசில காரணம் சொல்லி வெளியேறி விட்டதால்ஒரு அங்கம்குறைவுற்றதாய் நிலைக்க ஒருபுறமிருக்கஇப்பொழுதுஏற்படும்மற்றும்ஒருபிரிவால்மற்றொருஅங்கமும்இழக்க நேரிடுமோவென எண்ணக்க வேண்டியிருக்கிறது. இவ்வண்ணமே ஒவ்வொரு வருடத்திலும் முக்கியமான ஒவ்வொரு விஷயத்திலும் தலைவர்களுக்குள் அபிப்பிராய பேதம் தோன்றிஅவரவர்கள்தங்கள்தங்களைப்பின்பற்றின ஜனங்களுடன் காங்கிரஸைவிட்டுப்பிரிந்துமிதவாதிகளைப்போல ஒவ்வொருவரும்தங்கள்தங்களுக்கு பற்பலபெயரைசூட்டிக்கொண்டு பிரிந்துபோவார்களானால் தேசியகாங்கிரஸின் பெயரும் அதன் செல்வாக்கும் என்னவாகும். அப்பொழுது பிறதேசத்தாரும் இக்காங்கிரஸ் செய்யும் தீர்மானங்களில்எங்ஙனம்மதிப்புக்கொள்வர் இத்தேசத்து ஜனங்களும்தலைவர்களை எங்ஙனம் நம்புவர். ஜனசமூதாயம் இவ்விதம் பலபாகங்களாக பிரிவுபடுமானால் சமுதாயத்தின் லக்ஷியமும் எங்ஙனம் நிறைவேறும். ஆனால் இந்தியா ஒற்றுமையுடன் வாழ்வதில் பொறாமை கொண்டவர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும், அவர்கள் எண்ணம் நிறைவேறுவதற்கு தேசத்தலைவர்கள் உதவிசெய்தது போலாகும்! இதைத்தான் அவர்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆகலால் நெருக்கடியான இச்சமயத்தில்கக்ஷிபேதங்களுக்கு இடமுண்டாக்குவது சரியல்ல. தேசமகா ஜனங்களும் தேசத் தலைவர்களும் தர்க்கலத்தையும், கௌரவத்தையும் இச்சமயம் விரும்புவது சரியல்லவென்பதை யுணர்த்துகிறோம்.

## தேசவாசிகளின் சுதந்தரதாகமும் பிறநாட்டாரின்உதார நோக்கமும்

உலகத்தின் பற்பல பிரதேசங்களிலுள்ள தேசமகா ஜனங்களுக்குள் வெகுகாலமாகசுதந்தர தாகம் மேற்பட்டிருந்தபோதிலும் இம்மகாயுத்தங் காரணமாக அமெரிக்காவும் அது போன்ற நமது நேசதேசங்களும் ஒவ்வொரு பிரதேசத்திலுள்ள மகாஜனங்களுக்கு சுயநிர்ணய சுதந்தரம் கொடுக்கவேண்டுமென்று பறைசாற்றினர். அதனால் தேசமகாஜனங்களுக்கு ஏற்கனவே இருந்ததாகமானது புதிதாக உண்டாக்கிவிடப்பட்ட தாகத்துடன் கூடச்சேர்ந்து பெருந்தாகத்தை யுண்டாக்கிவிட்டது. இதற்காக அடிமைப்பட்ட தேசங்கள் யுத்தத்தின் முடிவை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தன. யுத்தம் முடிந்ததும் ஐரோப்பாவில் சிற்சில தேசங்களுக்கு சுயநிர்ணய சுதந்தரம் கொடுத்ததுபோல் நடிக்கப்பட்டது. இன்னும் அவர்களுக்குள்கலகமும்,சண்டையும் தீர்ந்தபாடில்லை உலக சமாதானமும்வெறும் பேச்சாகவே முடிந்தது. யுத்தகாலத்திலிருந்த ஜாதி சமத்துவம் சமாதான காலத்தில்சத்துருத்துவமாய் திரிந்தது. ஆங்கிலஆட்சிக்குட்பட்ட ஐயர்லாந்து, இந்தியா, ஈஜிப்டு ஆகிய தேசங்களில் எரிப்பதற்கு ஏதோ சிலசுதந்தரங்களைக்காண்பித்து பூர்ண சுதந்தரம் கொடுக்கப்பட்டதென்றும் ஓர் பேரும் வைக்கப்பட்டிருக்கிறது. அத்தேசத்திலுள்ள தேசியவாதிகள் அவற்றைப்பற்றி இன்னும் முடிவான ஓர் தீர்மானத்திற்குக் கொண்டுவரவில்லை. அயர்லாந்தைப்பற்றின விவகாரமும், கலகமும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இந்தியாவைப்பற்றியோ சொல்லவேண்டிய அவசியமேயில்லை. சுயராஜ்யத்திற்கு அஸ்திவாரமாகச் சொல்லப்படும் புதிய திருத்தங்களை இந்தியர்கள்ஒப்புக்கொள்ளவில்லை,

நிர்வாக அதிகாரிகளின் ஆட்சியையும் அவர்கள் இதுவரை செய்து வந்த அட்டூழியங்களையும் பற்றி வெறுக்கின்றனர். சுயராஜ்யம் பெறுவதற்கு ஒற்றுமையாமை தவிர வேறு கதியில்லையென்பதாய் தேசமகா ஜனங்கள் அறிந்து அவ்வண்ணமே காங்கிரஸ் மகாநாட்டின் மூலம் தங்கள் அபிப்பிராயங்களையும் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்துவிட்டனர் இதுவே இந்தியர்களை இதுகாறும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் நடத்தி வந்த செயலின் பயன்போலும். இது இங்ஙனமிருக்க அமெரிக்கா நாட்டாரின் மனப்பான்மை எவ்விதமிருக்கின்றதென்பதை சிற்று ஆராய்வோம்.

ஸ்பெயின் தேசத்தாரிடமிருந்து பிலிபைபின் தீவை 1898ல் அமெரிக்கர் பிடித்துக்கொண்டனர். அமெரிக்கர்கள் இரண்டு வருடத்தில் அங்குள்ள கலவரையை யடக்கி ஒரு வகையில் சிவில் கவர்ன்மெண்டு ஸ்தாபித்து 1914-15ல் ஜோன்ஸ்பில் என்ற ஓர் மசோதாவை யேற்படுத்தி பிலிபைன் வாசிகளுக்கு பூர்ணமான சுதந்தரம் கொடுப்பதாக வாக்களித்தனர். 1916ல் ஜோன்ஸ்பில் அமெரிக்கன் பார்லிமெண்டு சபையோரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கிடையில் அத்தீவு வாசிகளின் அபிவிருத்தியின் பொருட்டு அமெரிக்கர்கள் மிகவும் உழைத்திருப்பதோடு, ஆட்சி முறையிலும் அவர்களை பழக்கிவைத்து உயர்தர சபை, சாதாரண சபை யென்றும் இருவகை சபைகள் ஸ்தாபனம்செய்து பிலிபைனர்களை ஜனபிரதிநிதிகளாக நியமித்து அவர்களின் பூரண சுதந்தரத்துக்கு வேண்டிய மார்க்கங்களைத் தேடிவைத்தனர், இப்பொழுது பிலிபைனர்கள் அமெரிக்கன் கொடியின் கீழ் ஆட்சி புரிந்து வந்தாலும் சுதந்தரமான ஓர் ஆட்சி முறையை நடத்தும் பான்மையிலும், அதிகாரத்திலும் வந்துவிட்டார்கள். அமெரிக்கர்கள் பிலிபைனர்களுக்கு முன்செய்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றி பூர்ணசுதந்தரம்கொடுக்கும்படி கேட்பதற்கு அமெரிக்காவில் பிலிபைனர்களின் சுதந்தரகம்மிட்டி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, அவர்களும்அமெரிக்கர்களிடம் தங்களுடைய கோறிக்கைகளை ஈடேற்றும்படி கேட்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு வருடத்தில் பிலிபைனர்கள் பூர்ண சுதந்தரம் பெறலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது நிற்க ஜப்பானியர்களுக்குப் பாத்தியமுள்ள பார்மோஸா என்ற ஓர் தீவு இருக்கிறது. அதிலுள்ளவர்கள் மிகவும் அநாகரீக நிலைமையிலிருக்கின்றனர். அவர்களுக்கு ஹோம்ரூல் கொடுக்கவேண்டும் விஷயமாய் ஜப்பான் மந்திரிசபையார் ஆலோசித்து வருகின்றதாய் கோப் ஹெரால்டு என்னும் பத்திரிகையின் ஒரு ஆங்கிலப் பத்திராசிரியரே எழுதுகின்றார். ஸிரிய தேசத்தார் பிரஞ்சுக்காரரின் மேல்பார்வையை ஆக்ஷேபித்து கலகம் செய்கின்றனர். அராபியர்களும் சுயராஜ்யத்திற்காக பிரிட்டிஷாரின் மேல்பார்வையை ஆக்ஷேபித்து கலகம் செய்கின்றனர். ஒவ்வொரு ஜனசமுதாயத்தின் போக்கும் பூர்ணமான சுதந்தரத்தை நாடி நிற்கின்றதேயன்றி பிறருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் ஓர் நிலையைத் தாங்கி நிற்கச் சம்மதிக்கவில்லை யென்பது இதன் மூலமாய் அறியலாம். இது போல இந்தியர்களும் உலகச் சரித்திரத்தின் போக்கில் ஒத்துநிற்கக் கடமைப்பட்டவர்கள். ஏனெனில் இந்தியர்கள் முற்கூறிய தேசத்தினரைக் காட்டிலும் நாகரீகத்தில் சிறந்தவர்கள்.சமீபயுத்தத்தில்கூட பலதுறைகளிலும்மிகுந்தகியாதி அடைந்தவர்கள் அத்தகைய இந்தியர்கள், ஆங்கில ஆக்ஷியின் கீழ் 170வருஷகாலம் வாழ்ந்து வந்தும் அவர்கள் ஆங்கில அதிகாரிகளால் யாதொரு அபிவிருத்தியுஞ் செய்யப்படாமல் அடிமைகளாக்கப் பட்டிருப்பதையும், பிலிப்பைனர்களைப் போன்ற பலதேசத்தினர் சிறிது காலத்திற்குள்ளேயே தம்மை ஆளுவோரிடமிருந்து பூரண சுக சுதந்தரத்தையும் காருண்யத்தையும் நன்மதிப்பையும் அன்பையும் பெற்றுக் கவலையின்றி வாழ்வதையும் நினைத்து அவர்கள் ஆறாத் துயரமடைந்திருப்பதோடு, அவர்கள் மேன்மேலும் அதிகார வர்க்கத்தினரின் அடக்குச் சட்ட ஆட்சிமுறையால் வீணான தண்டனைகளுக்குள்ளாகிக் கஷ்டநஷ்டங்களை யனுபவித்துச் சோர்வதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றபான்மையைப் பார்க்கும்பொழுது, அந்த ஏழை இந்தியர்கள் மாத்திரமல்ல, வேறு எந்த தேசத்தினனாயினும் அவன் மனிதர் ஹிருதயம் படைத்திருப்பானாயின் அவ்வித்திய வாழ்க்கையைக் குறித்துப் பெரிதும் பரிதபிக்காமலிரான்!

ஆதலால் ஆங்கில ராஜதந்திரிகள் இந்தியர்களிடம் பூர்ணமான அன்பையும் ஆதரவையும் காட்டவேண்டிய அவசியத்தை உணர வேண்டும். அவ்வாறே இந்திய அதிகாரிகள் ஜனங்களை தம் நிலைமை தவறி கலங்கி நிற்கும்படியான ஓர் ஸ்திதியிலாக்கி வைத்திருப்பதை யுணர்ந்து இந்நெருக்கடியான சமயத்திலாவது தீர்க்காலோசனை செய்து தங்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றி தேசமெங்கும் சமாதானம் நிலைநிற்கும்படி இனியாவது செய்வார்களாக.



## பொது வர்த்தமானம்

### நமது ஜில்லா கலெக்டர்.

மிஸ்டர் ஏ ஜி லீச் ஐ சி எஸ் அவர்கள், நமது ராமநாதபுரம் ஜில்லா கலெக்டராகவும், மாஜிஸ்தரேட்டாகவும் ஆக்டிங்காக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

### கோட்டையூர் மிஸ்டர் வீரப்பசெட்டியார்.

கோட்டையூர் ராவ்சாகிப் மி கே எ வி டி வீரப்பசெட்டியார் தேவகோட்டை தாலூகா போர்டு மெம்பராக நியமனம் பெற்றிருக்கின்றார்.

### கண்டரமாணிக்கம் 4—7—1920

[நமது நிருபரிடமிருந்து]

காலநிலை:-மழைவேண்டிய அளவு பெய்திருக்கிறது, உணவுப் பொருள்கள் நிதானமில்லாத விலையாகவிருக்கின்றன.

அசுத்தம்:- சிவன் கோவிலிலிருந்து மாணிக்க நாச்சியம்மன் கோவிலுக்குப்போகும் வழி மிகவும் அசுத்தமாயும், நீர் தேங்கி நாற்றம் கொடுப்பதாயுமிருக்கிறது. கவனிப்பாரில்லை

யந்திரஸ்தாபனம்:-மாணிக்க நாச்சியம்மைக்குஒரு ஆசனக்கல்புதிதாயமைத்து அதில் ஒரு யந்திரமும் சென்ற 17ந் தேதி மஹாஸ்ரீ தவசிவாச்சார்ய ஸ்வாமிகளால் விதிப்படி ஸ்தாபித்து அபிஷேக ஆராதனைகள் முறையே நடத்தப் பட்டன ஆனால்நகரத்தவர்கள் ஆலயத்தை யமைத்து கும்பாபிஷேகஞ் செய்யத் திருவருள் எப்போது கூட்டி வைக்குமோ? தெரியாது!

விவேகாநந்தசபா:-இவ்வூரில் இப்பெரிய சபை ஒன்று இருக்கிறது. இதில் புரட்டாசி 3,4, தேதிகளில் விசேஷ கொண்டாட்டங்கள் நடைபெறுமென்று அறிகிறோம். பணத்திலும் குணத்திலும் மிக்க நகரத்தவர்கள் பாஷை, சமயம், சமூகம் என்னும் பொது விஷயங்களிலும் மனஞ்சென்று மதிப்புறவது மிகப்பாராட்டத்தக்கதாம்.

### விவேகாநந்த சபை

இதன் மூன்றாவது ஆண்டுநிறைவு விழா, நிகழும் ரு, ௨௨ (செப்டம்பர் 18,19)சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஆத்திக்காடு தெற்கூர் ஸ்ரீமாந் கரு, முத்து அழகப்ப செட்டியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும். அவ்வமயம்பலவித்வான்களும் மாணக்கர்களும் பிரசங்கஞ் செய்வார்கள். எல்லோரும் நண்பர்களுடன் விஜயஞ் செய்துசிறப்பிக்கவேண்டுமென ஷை சபையார் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

### வேந்தன்பட்டி.

(புதுக்கோட்டை நாடு)

காலநிலை —சூரியஒளி மிகுதியாய் மிளிர்கிறது மழையில்லை.

விலை.— பொருள்களின் விலை தணியவில்லை.

தெருக்கூத்து;—இந்நகரில் நாடகமாடுவோர் சதாரம் என்னும் சரித்திரக்கூத்தை ரௌத்திரிஞு ஆவணி௴ 19௳ வெள்ளிக்கிழமை இரவில் வள்ளி சரித்திரத்தையும் ௨௦௳ திங்கட்கிழமைஇரவில் அரிச்சந்திரன் சரித்திரத்தில் காணி காத்தல் என்னும் பாகத்தையும் நடித்துக்காட்டினர். இதுவேவருணனுக்குகந்ததாகவின், அவன் இனியாவது நாடுதழைக்க நல்லமழைப்பொழிவானாக நிருபர்,

### பர்ஷியாவில்போல்ஷிவிக் கொள்கைகள்

லண்டனில் பிரசுரமாகின்ற மார்னிங் போஸ்டு என்ற பத்திரிகையானது லிவிங் ஏஜ் என்ற பத்திரிகையை ஆதாரமாகக் கொண்டு போல்ஷிவிக் கொள்கைகள் பர்ஸியாவில் அதி தீவிரமாய்ப் பரவி வருகின்றன வென்னும் விஷயத்தைக் குறித்துச் சில அபிப்பிராயங்களைத் தெரிவிக்கின்றது. மார்னிங் போஸ்டு, கூசிக்கானி என்ற பெர்சியர்ஒருவரே இதற்குக் காரணமென்றும் அவர் அமிதவாதத்தில்பேர்போனவரென்றும் சொல்லுகிறது. அவர் நடத்திவரும் போல்ஷிவிக் வேலைகள் வெகு சுறுசுறுப்பாய் பரவி வருகிறதாம். அதன் மெம்பர்களுக்கு ஜாங்கிஸ் என்று பெயராம். இப் பெயர்களையுடையவர்கள் ஓர் ஜாதியாரல்ல. 1917ல் கூசிகான் என்பவர் அருக்கியில் ஓர் கவர்னராயிருந்தார். பின்னால் அவர் பிரிட்டிஷாருக்கு இணங்கினதோடு சமீபத்தில் அவர் அடைக்கலமும் புகுந்திருக்கிறார். அவந்தி என்ற இத்தாலியப் பத்திரிகை மத்திய ஆசியாவில் மகம்மதியர்கள் வசிக்கு மிடங்களில் போல்ஷிவிக் கொள்கைகள் வெகு விசைவாய் பரவி வருவதற்கும் போதிய சாட்சியங்களிருப்பதாய் குறிப்பிடுகிறது. ஈரான் என்ற ஸ்தலப் பத்திரிகையும், போல்ஷிவிக் கொள்கைகள், மகம்மது நபியின் உண்மையான மதக் கொள்கையையே போதித்து வருவதாயும் எடுத்துக்கூறுகிறது. இதற்காதாரமாக அக் கொள்கைகள், பலதார விவாகத்தையும், தாரத்தை விலக்குவதற்குரிய சுதந்தரத்தையும் போதிப்பதென்பதேயாம். போல்ஷிவிக்கள் ஆத்மாவுக்கு ஞானோபதேசம் செய்யும்சிநேகிதர்களென்றும் இங்கிலீஷ்காரரிடமிருந்து தப்புவிக்கும் ஈசுபரனென்றும் பாரசீகர் ஒருவர்எழுதியிருக்கின்றனராம்.

### அசோகசக்கிரவர்த்தியும் அவரது சுரங்க இலாக்காவும்

காமேர்ஸ் என்ற பத்திரிகையில் இந்தியாவின் புராதன நாகரீகத்தைப் பற்றிக் கூறும்பொழுது அசோகர் காலத்தில் பூமியிலுள்ள கனிவர்க்கங்களை யெடுப்பதற்கும் அதற்குரிய வேலைகளைச் செய்வதற்கும் ஏற்படுத்தப் பட்டிருந்த இலாகாவின் சிறப்பைப்பற்றி மிஸ்டர் ஏ மெரியா ஸ்மித் என்பவர் பின் வருமாறு பொழிகின்றார்:—கிறிஸ்து பிறப்பதற்கு 250 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவை ஆண்டுவந்த அசோக சக்கிரவர்த்தி என்பவர், தமது ராஜ்யத்தில் கனிவர்க்கங்களைத் தோண்டி யெடுப்பதற்கும் வேலை செய்வதற்கும் வேண்டிய என்ஜினீர்கள், சுரங்க இலாக்கா இன்ஸ்பெக்டர்கள், அதன் ஆராய்ச்சி சாலை முதலிய பல வசதிகளையும், நிபுணர்களையும், ஏற்படுத்தியிருந்தார் சீனதேசத்து யாத்திரீகர்கள் அசோகர் காலத்திலே இந்தியாவிலுள்ள கனிவர்க்கங்கள் சாலைகளையும், அதன் சம்பந்தமான இலாகாக்களையும் அவர்கள் வேலைகளையும் பற்றி சீனாவிலுள்ள ஹாங்கோங்கிலுள்ள வாசகசாலையில் எழுதி வைத்திருக்கிறார்கள் அப்புஸ்தகங்களிலிருந்து16வதுநூற்றாண்டில்இந்தியாவுக்கு வந்த போர்த்துகேசிய தேசத்து மந்திரிமார்கள் தெரிந்துகொண்டு, சிலபுஸ்தகங்களை எழுதிவைத்திருக்கிறார்கள்,மைசூர்கவர்ன்மெண்டார்போர்த்துக்கேசியரின் புத்தகங்களிலிருந்தும் ஆராய்ச்சி செய்து, மேற்கண்ட விஷயத்தை மொழி பெயர்த்திருக்கின்றனர். சீன தேசத்தார் ஒரிஸ்ஸாவிலுள்ளபூரி துறைமுகத்திலிறங்கி தங்களிடமுள்ள வேலைக்குப் பதிலாக ஒரிஸ்ஸா பக்கத்திலுள்ள கனிகளிலிருந்தும் தங்கத்தைப் பெற்று வந்தார்கள் அக்காலத்தில் நாணய மாற்றமின் நிலையானது 12 பங்கு வெள்ளிக்கு 1 பங்கு தங்கம் பண்ட மாற்றலாக இருந்து வந்திருக்கிறது.

### மெஸபடோமியாவும் ஒருராணுவஸ்தலமாகஇருக்கவேண்டுமோ?

இவ்விஷயத்தைக் குறித்து, இந்திய மகாஜன சபையாகிய விசேஷ காங்கிரசில் நமது தலைவர்கள் வெகுவிரிவாகப் பேசியிருக்கின்றனர். ஏகாதிபத்தியத்தை யழிக்கவேண்டுமெனும் எண்ணமோடு இதர தேசங்கள்மேல் போர்புரிய முற்பட்டாலன்றி, மெஸபடோமியாவைப் போன்ற ஸ்தலங்களை ராணுவஸ்தலமாக உபயோகிக்கவேண்டிய அவசியமில்லை யெனவும், இப்படைகளை, ஒரு காரணங்கூறியேனும் ஒருகாரணத்திற்காக ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலும் உபயோகிக்கின்ற வழக்கத்தை கவர்ன்மெண்டார் இனி விட்டுவிட வேண்டுமெனவும் நமது தலைவர்கள் வற்புறுத்தியிருக்கின்றார்கள். இவை ஓர்புறமிருக்க மேற்படி மெஸபொடோமியாவின் விஷயமாய் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் அதன் ராணுவ விஷய நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார் — மெஸபொடோமியாவானது இந்தியப் பாதுகாப்புக்கு இன்றியமையாததோர் ஸ்தலமாகும். இந்தியாவானது எந்த சமயத்திலும் வடக்கே யிருந்தும்வடமேற்கிலிருந்தும், ருஷ்யாவால் படையெடுக்கத்தக்க அபாயத்திற்குள் அகப்பட்டுநிற்கின்றது. ஆப்கானிஸ்தானத்தின் வழியாக இந்தியா படையெடுக்க முடியாது. ஆனால்பெர்ஷியா வழியாகப் படையெடுப்பு ஏற்படக்கூடும். டாஸ்கந்து, க்ராஸ்பின், காக்கஸ் முதலிய இடங்களின்வழியாகப் படை யெடுப்பு ஏற்படலாம். மேலும் டெஹரான் ராணுவ முன்னேற்பாடுகளால் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கவில்லை.

ருஷ்யா வெகு சுலபமாக அந்த இடத்தைக் கைப்பற்றி விடலாம், ருஷ்யா ஒரு முறை அந்த இடத்தைக் கைப்பற்றி விடுமாயின், நாம்மீண்டும் அதை மீட்பதென்றால் மிகப்பிரயாசமாம். அகவே பெர்ஸியாவில் பிரிட்டிஷ்ராணுவத்தை வைப்பதற்குத் தகுந்தஇடம்மெஸபொடோமியாவேயாம்.

இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தைக் காக்குமோர் கவசமாக மெஸபொடோமியாவை நாம் கருதும் தருணம் வரையில் மெஸபொடோமியா ஒரு முக்கியராணுவஸ்தலமாகவேண்டிய அவசியமுண்டு. மெஸபொடோமியாவை நாம் வைத்துக்கொள்வதால் அநாவசியமான செலவு நேரிடுவதாகச் சொன்னால் இந்தியப்பாதுகாப்புக்கான காரியங்களை நாம் வேறு முறையில் உடனே செய்யதீர வேண்டும்.மெஸபொடோமியாவில் அராபியர் செய்துவருகின்ற இராணுவக்கிளர்ச்சியின் நோக்கம் இன்னதென்று இன்னும் குறிப்பாக விளங்கவில்லையாதலால் அந்தப் பிரதேசத்தில் நாம் செய்துவரும் யுக்கமானது மிகச் சிக்கலாக இருந்துவருகிறது. ஆகையால் நாம் தென்னாப்பிரிக்காவில் செய்தமாதிரியாகச் செய்ய வேண்டியதுதான் சரியானமுறை. அதாவது கலகங்களை அப்போதைக்கப்போது அடக்கி (கலகமடக்கி) சமாதானமேற்பட்டவிடங்களில் துருப்புகளுக்கு வேண்டிய வாசஸ்தலங்களை யேற்படுத்தி, கொஞ்சங்கொஞ்சமாக கிளர்ச்சி ஸ்தலங்களைக் குறைத்துவரவேண்டும். ஆனால் கலகமடங்கியவுடன் ஜனங்களுக்கு சுதந்தரம் வழங்கப்பட்டு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும். ஏகதேசத்தில் இராணுவத்தைக்கொண்டே அடக்கி விடுவதென்பது கூடாதகாரியம்" இந்நிருபரது குறிப்பு ஆலோசிக்கத் தக்கதாம்.

### தக்கதோர் சமயம்.

(பம்பாய் விசேஷ நிருபரிடமிருந்து)

மாட்சிமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜினால், ராய்பூர் வாசியும், இதுவரையில் கவர்ன்மெண்டில் பல துறைகளிலும் உழைத்து கியாதிபெற்றவருமாகிய லார்டு ஸின்ஹா, ஒரிஸா, பீஹார் மாகாணங்களின் கவர்னராய் நியமிக்கப்பட்டதை அறிய இந்தியர்கள் சந்தோஷப்படாதிரார்கள். ராஜ்யபரிபாலனத்தில், ஆங்கிலர்களுக்கு இந்தியர்கள் எவ்வழியிலும் பிற்பட்டவர்கள் அல்லவென்பதை நன்கு விளக்கிக்காட்டிய லார்டு ஸின்ஹாவுக்கும் சரி, இதுகாறும் அனுஷ்டானத்தில் இராத ஒரு புதிய கொள்கையைக்கொண்டு லார்டு ஸின்ஹாவை, நம் தாய்நாட்டின் கவர்னர்களிலொருவராய் நியமிக்க காரணபூதரான மிஸ்டர்மாண்டேகுவுக்கும்சரிநாம் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறோம்.

இனிலார்டுஸின்ஹாவோரிஸா மாகாணங்களின் கவர்னராய் நியமிக்கப்பட்டதால், அவர் இதுகாறும் பார்த்து வந்த இந்தியா உதவி மந்திரிஸ்தானம்காலியாகிறது. இச்சமயம்தன்னுடையபுதுக்கொள்கையை மேன்மேலும் அனுஷ்டானத்தில் கொண்டுவந்து பலப்படுத்த இது தக்கதோர் சமயமென்று, மஹாபுத்திமானாகிய மிஸ்டர் மாண்டேகுவுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அனாவசியமே. இதுகாறும் இந்தியாவின் உதவிமந்திரியாக நியமிக்கப்பட்டு வந்தவர்கள், இந்தியாவைப்பற்றிய அனுபவம் சற்றுமில்லாத ஆங்கிலர்களே. இந்தியாவைப்பற்றி அனுபவமில்லாமல் விவரமாய் நியமிக்கப்படும் இந்தியா மந்திரியாகிய ஒரு ஆங்கிலருக்கு அவரைப் போன்று அனுபவமற்ற மற்றொரு ஆங்கிலேயனையே உதவிமந்திரியாக நியமிப்பதில் பலன் என்ன? இதே உதவி மந்திரி ஸ்தானத்தில் இந்தியாவில் பிறந்துவளர்ந்து ராஜீய விஷயங்களில் பலதுறைகளிலும் இறங்கி கஷ்டப்பட்டு, முதிர்ந்த ஞானமும் அனுபவமும் அடைந்துள்ள ஓர் இந்தியரை நியமித்தால், அவர் இந்தியாமந்திரிக்கு தன் கடமையை செவ்வனே செய்து முடிக்க எவ்வளவு உபயோகமுள்ளவராவர். ஆகையால், கருணை பொருந்திய கவர்ன்மெண்டார், இந்தியா உதவிமந்திரிஸ்தானத்திற்கு இந்தியரில் எந்தக் கட்சியினரைச் சேர்ந்தவராயிருப்பினும் சரி, முதிர்ந்த அனுபவமும், ஞானமும் உள்ள ஓரிந்தியரை,நியமிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். கடவுள் கருணைபுரிந்து உதவிசெய்வாராக.

### பிரசுரிக்கப்படாதவை,

1 மணப்பாறை (ஒருவரையும் தாக்கி எழுதாது, குணத்தை மாத்திரம் விவரித்து, ஹிந்து ஜாதிய அபிமானத்தின் மீது நின்று எழுதுதல் நலம்) 2. பர்மாவிலுள்ள ஆலயங்களுக்கு அபரிமிதமாய்ச் செலவிடுவதேன்? (விஷயத்தைச் சுருக்கி, இலக்கணவழுவின்றிய நடையில் எழுதப்படவேண்டும்) 3. ஒய்பக்குண்டான் சிறுவயல் ஸ்ரீ அழகிய தேவி வாசக சாலையின் மெம்பர்களுக்கோர் விஞ்ஞாபனம் (வாசகசாலைக்கு நேரில் எழுதினால் நன்மையுண்டு)

### இந்தியரின் உதவியும் பிரிட்டிஷாரின் பிரதிப் பிரயோஜனமும்

இந்தியர் பிரிட்டிஷாருக்குச் செய்திருக்கும் உதவியையும் அதற்கு பிரிட்டிஷார் இந்தியருக்கு இதுவரை செய்துவந்திருக்கும் பிரதிப் பிரயோஜனத்தையும் பற்றி லார்டு பாகென்ஹெட் என்பவர் பல பத்திரிகைகளுக்கு எழுதியவற்றின் சாராம்சத்தை பம்பாய் க்ரானிகிள் பத்திரிகைக்கு எழுதிய ஒரு நிருபரின் கடிதத்திலிருந்து அறியலாகும்.

1914முதல் 19வரை நடந்தமகா யுத்தத்தில் இந்தியப் போர்வீரர்கள் இங்கிலாந்திலுள்ள கடலோரங்களைக் காப்பாற்ற வீரத்துடன் சண்டை செய்யாதிருந்தால் இங்கிலாந்து துறைமுகங்களை இழந்துநிற்கும். ஈஜிப்டு மெஸபடோமியா டார்டனல்ஸ் பாலஸ்தீன்பிரான்சு முதலானபிரதேசங்களில்இந்தியத் துருப்புகள்தைரியமாய் போர் செய்தனர் சீர்மூழ்கிகளைச் சற்றும் மதியாமல் இந்திய மாலுமிகள் வேலைசெய்தனர்.

பிரிட்டிஷ் சாமான்கள் இந்தியாவில் ஏராளமாய் விற்பனை செய்யப்படுவதோடு அவர்களின் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களையும் இந்தியா கொடுத்துதவுகின்றன.

யுத்த தளவாடங்களுக்குபயோகமான பல சாமான்களையும் இந்தியாவே இங்கிலாந்துக்குக் கொடுத்துதவின.

பிரிட்டிஷ் சாமான்கள் யுத்தத்துக்குமுன் 100க்கு 63 இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டன.

லங்கா ஷைரிலிருந்து வருடம் 1க்கு 3கோடிபவுன் பெறுமான துணிகளை இந்தியர்கள் விலைக்கு வாங்குகின்றனர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நிலைப்பதற்கு இந்தியாவின் உதவி தேவையாயிருக்கிறது. இந்தியா ஏகாதிபத்தியத்தைவிட்டு பிரியுமானால் மதிப்பு குறைந்துவிடும்.

மேற்குறித்தவைகளால்இந்தியா இங்கிலாந்துக்குச் செய்துள்ள உதவி துலக்கிவிட்டது.

இங்கிலாந்து மேற்படி உதவிகளைப் பெற்று இந்தியாவுக்குச் செய்திருக்கும் பிரதிப் பிரயோஜனத்தை கீழ் கண்டபடி விவரிக்கிறார். 150 வருடங்களாக இந்தியாவை ஆங்கிலேயர்களாண்டும் 100 க்கு 6 பெயர்களே பெயரெழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருப்பதோடு, உலகத்திலுள்ள நாகரிக தேசங்களில் எல்லாம் படிப்பில் குறைந்த தேசம் இந்தியாவென்றேசொல்லும்படியாயிருக்கிறது.

சுகாதாரத்தில் பின்னடைந்த தேசம்இந்தியாயென்பதற்குசமீபத்தில் இன்புளுவன் சாஜ்வரத்தில் இறந்த90 லக்ஷம் ஜனங்களிலிருந்தும் அறியலாகும்.

இந்தியத்தொழில்கள் லங்காஷயருடன்போட்டிபோட முடியாமல்நசித்து வருவதிலிருந்தும், தொழில் குறைவு விளக்கமாகிறது.

இங்கிலாந்தின் துறைமுகங்களைக் காப்பாற்றிஇந்தியருக்கு ரௌலட் சட்டத்தை பிரிட்டிஷார் வெகுமானம் அளித்திருக்கின்றனர்.

அச்சட்டத்தைக் கண்டனஞ்செய்ய இந்தியர்கள் ஜலியன் வாலா பாக்கில் கதறினர்கள் அதற்கு வெகுமதியும் பெற்றார்கள். தங்களை இம்சித்தவர்களைப்பற்றி எங்கு நடவடிக்கை நடத்துவார்களோ வென்ற பயத்தினால் தொடாதொழி மசோதாவையும் இயற்றிக்கொண்டார்கள்.

ஹிதாயதுல் இஸ்லாம்
இப்பத்திரிகை ஜாதி வித்தியாசமில்லாமல் எல்லா மார்க்கங்களையும் கல்வியையும் வியாபாரத்தையும், இராஜாங்க சட்டத்தையும் பொதுஜன சகாயங்களையும் தைரியமாய் பயமில்லாமல்எடுத்துப் பேசும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக் காண்பிக்கும். வாரம் 10,000 காப்பிகள் வெளியாகின்றன. வருஷச்சந்தா ரூ 5-0-0 பினாங்கு சிங்கப்பூர் ரூ 7-8-0. முன் பணம் அனுப்பவேண்டும். வி. பி. பி இல்லை.
டாக்டர் எச். எச். மவ்லானா ஸைபத் ஹாஷிமி,69 டின்ஸ் ரோட். கொழும்பு.

### நோட்டீஸ்

இராமநாதபுரம் ஜில்லா காரைக்குடி முத்துப் பட்டணத்தி லிருக்கும் கி. ராமஸ்வாமி அய்யங்கார்சகல ஜனங்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்

எனுடைய ஸ்வீகார புத்திரன் சின்னசாமி என்ற கிருஷ்ணய்யங்கார் சில காலமாய நல்ல நடவடிக்கையில்லாமல் அக்கிரமச் செலவுகள் செய்து அதற்காக சொற்பத் தொகைகள்கடன்வாங்கி ஜாஸ்தி தொகைக்கு ஆதாவுகள் செய்து கொடுப்பதாகவும் பிரதிப்பிரயோஜன மன்னியிலும்மற்ற விதமாயும் பிரட்டான தஸ்தவேஜிகள் செய்து கொடுப்பதாகவும் இன்னமும் அந்த மாதிரி ஆதாவுகள் தஸ்தவேஜிகள் செய்துகொடுக்கப் பிரயத்தனம் செய்துகொண்டிருப்பதாகவும் தெரிய வருவதால் ஷை கிருஷ்ணய்யங்காருக்கு யாரும் கடன்கொடுக்கக் கூடாதென்றும் யென் குடும்ப சம்பந்தமான சகல ஜங்கம ஸ்தாவர சொத்துக்கள் பூராவாக என்சுயார்ஜித மென்றும் அதில்ஷை கிருஷ்ணய்யங்காருக்கு ஒரு விதமான பாத்தியமும் கொஞ்சம கூடக் கிடையாதென்றும் அவருக்குக் கடன் கொடுத்தவர்களும் இனி கடன் கொடுப்பவர்களும் கொடுத்த தொகையை இழக்கவேண்டி யிருக்குமென்றும்இதன் மூலம் தெரிவிக்கிறேன்.

கி. ராமசாமி அய்யங்கார்
காரைக்குடி முத்துப்பட்டணம்.
13—9—20.

### நோட்டீஸ்.

சிவகெங்கை சப்கோர்ட்டு.
1920ஞு S. C. No. 452

வாதிகள்.

1. ஆ.க. வீரப்பகம்பலம்
2. ராம. ஆதினமிளகி அம்பலம்
3. சி. கா பெரி. சுப்பய்யா அம்பலம்
4. கொ. சொ, சுப்பய்யா அம்பலம

பிரதிவாதிகள்.

1. விரு வேலாயுதமம்பலம்
2. சி பெரி நாச்சியப்பனம்பலம்
3. பெரி சி சொர்ணகாளை அம்பலம்
4. நாகலிங்கம் கோனார்
5. அளரப்பக் கோனான்.

ஷை நம்பரில் ஷை வாதிகள் எழுவன்கோட்டை தாலூகா மாள கண்டரன் கிராமத்தில் உள்ள கிராம தேவஸ்தானமான கொப்புடைநாயகி அம்மன் கோவிலுக்காக மேற்படி கிராமத்தார்கள்கோரிக்கைப்படி 1வது பிரதிவாதி பேருக்கு குத்தகை எடுத்த ஜமீன் பண்ணை நிலங்களை சாகுபடி செய்து மேல்வாரம்வகையறாவை கிரமப்படி கொடுத்து வருவதா யெழுதிக்கொடுத்திருக்கும் வர்த்தமான லெட்டர்படிக்கு வரவேண்டிய 1328, 1329ம் பசலிகள் மேல்வாரம் வகைபறு பகுதிகளை வசப்படுவதற்காக பிரதிவாதிகள் பேரில் மேற்படி கிராமதார்களில் முக்கியஸ்தர்களானவாதிகளால் மேற்படி கிராமதார்களுக்கு ரெப்ரசென்டேட்டிவாக பிரதிவாதிகள் பேரில் வியாஜ்ஜியம் செய்துகொள்ள அனுமதி கொடுக்கவேணுமாய் மனுக்கொடுத்து உத்திரவாகி மேற்படி வியாஜ்ஜியத்துக்கு வாய்தாவுக்கு 1920ஞு அக்டோபர்௴ 4௳ போடப்பட்டிருக்கிறது. மேற்படி நம்பரில் கட்சிக்காரர்களாக சேர்ந்துகொள்ளப் பிரியப்படுபவர்கள்ஷைதேதியிலாவது அல்லது அதற்கு முந்தியாவது, நேரிலாவது அல்லது அதிகாரம்பெற்ற வக்கீல் மூலமாகவாவது ஆஜராகி தெரியப்படுத்திக்கொள்ளவேணும்.

எஸ். சின்னஸாமி அய்யங்கார்
வக்கீல்
சிவகங்கை.
5-9-20.

## 3-ம் பக்கம் தொடர்ச்சி

ருப் போகவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. சென்ற 12 வருஷகாலமாக நான் சட்டசபையில் இருந்து வந்திருக்கிறேன். இந்த நிலையில் சட்டசபைகள் இருக்கும்போது அதில் நான் ஸ்தானம் வகிக்க விரும்பவில்லை. ஒரு முறை மௌன...

[illegible]

சட்டசபையை பகிஷ்காரம் செய்தவர்கள் ... சில காரணங்களை விளக்கினார். ... ஸ்ரீ காந்தியின் தீர்மானம் ... ஆதரவாக 1826 பேரும் எதிராக 883 பேரும் ... ஒப்புக்கொண்டனர்.

## அக்கிராசனரின் முடிவுரை.

[illegible]

## பேசுங் குரங்கு

அமெரிக்காவிலிருந்து டாக்டர் ரிச்சார்ட் எல். கார்னர் என்பவர் தமது ஆயுள் முழுவதும் குரங்குகளின் பாஷைகளைக் கற்பதிலேயே ஆயுளைச் செலவழித்து ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்...

[illegible]

## விநோதக் குறிப்பு.

### ஒரு கணிதநிபுணரின் கற்பனை.

அமிர்தபஜார் பத்திரிகையில் ஒரு நண்பர் பின்வரும் விநோதக் கணக்கைக் குறிப்பிடுகின்றார்:—

சட்டசபையில் எந்த எந்த சமூகத்தார் ...

[illegible]

## நீராவிக்கிராமம்

ராமநாதபுரம் ஜில்லா
(ஒர் நிருபரிடமிருந்து)

காலில:—விருதுபட்டிக்குக் கிழக்கும் மாறுமதளைக்குத் தெற்கிலும் மழையில்லாமல் ஜனங்கள் வருந்துகிறார்கள்.

இவ்வூரில் சுமார் 500 வீடுகள் இருக்கின்றன...

[illegible]



## பல திரட்டு.

### விசேஷ காங்கிரஸின் விசேஷ சம்பவங்கள்.

#### காங்கிரஸிற்கு ஒரு காவல் கருவி.

[illegible]

## 150 பத்திரிகைப் பிரதிநிதிகள்.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பத்திரிகைகளுக்கு எழுதுவதற்காக வந்திருந்த பிரதிநிதிகள் மொத்தம் 150 பேராம். ஆனால் காங்கிரஸ் ரிப்போர்ட்டர்கள் மட்டுமே அக்ராசனருக்கு அருகே உட்கார்ந்திருந்தனராம்.

### [எனது மரணத்தால்

[illegible]

## போலிஸ் சமாதானம்.

போல்ஷவிக்கர் சமாதானஞ் செய்ய தயாராய் இருப்பதாகப் போலந்து அரசு விஷய மந்திரி சில பத்திரிகாசிரியர்களிடம் தெரிவித்தாராம். இது உண்மையா என்பது இனித்தெரிய வேண்டும்.

### மாகதச் சுரக்கம்.

[illegible]

## ஓட்வியரின் சாக்ஷியத்தை வெளியிட முடியாதாம்.

சென்ற செப்டம்பர் மாதம் 8-ந் தேதியன்று ஸிம்லாவிலே நமது ராஜப்பிரதிநிதியாரின் சட்டசபை கூடினது. அதில் மிஸ்டர் சின்ன என்பவர் ஹண்டர் கமிட்டியின் முன் ஸர் மைக்கேல் ஓட்வியரின் அளித்த சாக்ஷியத்தை கவர்ன்மெண்டார் வெளியிட...

[illegible]

அவ்வளவு தூரம் ஒழுங்குபடுத்தி வைத்திருந்தா ளென்றும், ஆனால் அந்த மாது சிரிக்காமல் கோமான பார்வையுடன் இருந்தாலன்றி அவளது முகம் அழகாயிருப்பதில்லை யென்றும் சொல்லப்படுகின்றது. அடிக்கடி சிரித்தால் அழகுபோய் விடுகின்றதாம். இச்சம்பவம் உண்மையாயின் மேனாட்டின் போக்கைக் குறித்து நாம் பெரிதும் விசனிக்கவேண்டும்...

[illegible]

Printed and Published by S. T Ramanathan Chettiar at the "Vysiamitran" Branch, Press, Karaikudi.

END OF
ISSUE